மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயிரியல் பூங்கா அமைப்பது பற்றிய மூல வினாவிற்கு சம்பந்தமின்றி வனச் சாலை பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துருவை எங்களுக்குத் தெரிவித்தால், வன அதிகாரிகள் மூலமாக பரிசீலனை செய்து, நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி

***9912—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *செஞ்சி தொகுதி, அனந்தபுரத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *மேல்நிலைப் பள்ளியை நேரடியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகப் பிரித்து தரம் உயர்த்த இயலாது. ஏற்கெனவே செயல்பட்டுவரும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை மட்டுமே பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2017 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சிக் கோட்டையிலிருந்து செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு என்னை அழைத்து வந்த தளபதி அவர்களை வணங்குகிறேன். செஞ்சி தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இங்கு அதிகமாக வசிக்கிறார்கள். விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்வோர் நிறைந்த பகுதி. அனந்தபுரம் பேரூராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் மொத்தம் சுமார் 1,600 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இதில் 500-க்கும் மேற்பட்டவர்கள் மாணவிகள். எனவே, மாணவியர்களுடைய நலன் கருதி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை ஏற்படுத்தித் தர வேண்டும். அனந்தபுரம் பேரூராட்சியைச் சுற்றி சுமார் 20 ஊராட்சிகளும், 50 வருவாய்க் கிராமங்களும் உள்ளன. தங்கள் பெண் பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்காக சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செஞ்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படிக்க வைக்கிறார்கள். சிலர் தங்கள் பெண் பிள்ளைகளைத் தனியார் பள்ளிகளில் படிக்க வைக்கிறார்கள்.*

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், பெண்களுக்கென தனியாகப் பள்ளி வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அதை மட்டும் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *செஞ்சி தொலைவில் இருப்பதால் பெண்கள் சென்று வர அச்சமாக இருக்கின்றது. மாணவியர்களின் பாதுகாப்பிற்கு தனிக் கவனம் செலுத்தி, பெண் கல்வி உயர்வதற்காக வழிவகை செய்ய வேண்டும். அனந்தபுரம் பேரூராட்சியில் பள்ளிக்கான கட்டட வசதிக்கு தனியாக இடம் உள்ளது. பெண்களுக்கென்று தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளியை உருவாக்கிக் கொடுத்தால், இன்னும் கூடுதலாக பெண் பிள்ளைகள் படிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை நிறைவேற்றித் தருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

[2017 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனந்தபுரம் பேரூராட்சியில் இருக்கின்ற அந்தப் பள்ளியில் இருபாலரும் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். பெண்களுக்காகத் தனியாக இருந்தால் மட்டும்தான் அதைச் செயலாக்க முடியுமேதவிர, இருபாலர் பள்ளியை பெண்களுக்கென தரம் உயர்த்த சட்டத்தில் இடமில்லை. ஆகவே, அருகில் உயர்நிலைப் பள்ளி ஏதாவது பெண்களுக்கென இருக்குமேயானால், உடனடியாக மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு இந்த ஆண்டு பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செஞ்சியிலிருந்து செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வந்திருக்கிறேன் என்று சொன்னார். உங்கள் கோரிக்கைக்கு சட்டத்திலே இடமில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமிருந்தால் எல்லாவற்றையும் செயல்படுத்தலாம். அனந்தபுரம் பேரூராட்சியைச் சுற்றி சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகள், பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தினால், செஞ்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வருகின்றார்கள். அந்தக் கிராமத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் பெண் பிள்ளைகளை அதிக தொலைவில் அனுப்ப வேண்டுமென்ற காரணத்தினால், 6 ஆம் வகுப்பு மற்றும் 8 ஆம் வகுப்பு வரை மட்டுமே படிக்க வைக்க முடிகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. செஞ்சி பகுதியில் வேலைக்குச் செல்லும் பெண் பிள்ளைகள் அதிகம். பெண்கள் இந்நாட்டின் கண்கள் என்பதை உணர்ந்து, அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு செஞ்சி தொகுதி, அனந்தபுரம் பேரூராட்சியில் பெண்களுக்கென்று தனியாக மேல்நிலைப் பள்ளி ஒன்றை அமைத்தால், கிராமத்தில் உள்ள பெண் பிள்ளைகள் தொடர்ந்து கல்வி பயில உதவியாக இருக்கும். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று கேட்ட காலத்தை மாற்றி, பாத்திரம் தேய்க்கும் பெண்களுக்கு சட்டம் எதற்கு என்று*

2017 ஜூலை 14]

சொன்ன காலத்தை மாற்றி, தந்தை பெரியாருடைய கனவை நனவாக்குகின்ற வகையில், பெண்களுக்கு சொத்தில் சம பங்கை அளிக்க சட்டம் கொண்டு வந்தார் தலைவர் கலைஞர் அவர்கள். பெண்களுக்குத் தனியாக மேல்நிலைப் பள்ளியை அமைத்துத் தந்து, பெண்களின் உரிமையைக் காக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்காகவே பல்வேறு திட்டங்களை அறிவித்து, இந்தியாவிற்கே சரித்திரம் படைத்தவர் நம்முடைய மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடைபெறும் இந்த அரசைப் பொறுத்தவரையிலும், அனந்தபுரம் பேரூராட்சிக்கு அருகில் ஏதாவது உயர்நிலைப் பள்ளி இருக்குமேயானால், அதை உடனடியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இல்லையென்று சொன்னால், பெண்கள் நடுநிலைப் பள்ளி ஏதாவது இருக்குமேயானால் இந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளியாகவும், அடுத்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மண்ணை விட்டு மறைந்தாலும் மக்கள் மனதில் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட விளாங்குறிச்சி மாநகராட்சி, 32–வது வார்டில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

[2017 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள் இன்றுதான் கேள்வி கேட்டிருக்கின்றார். உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது தொடர்பான கோப்பு நேற்றையதினம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்களுக்காக மீண்டும் அதுகுறித்துப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, 73–வது வட்டத்தில் உள்ள திருவேங்கடசாமி தெருவில் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளியில் பயில்கின்ற மாணவர்களுக்கு போதிய வகுப்பறை வசதிகள் இல்லை. எனவே, வகுப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தருகின்ற விதத்தில் புதிய கட்டடம் ஒன்று கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருப்பதால், இதுகுறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூலை 14]

அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

203—

பண்ணைப் பசுமை நுகர்வோர் அங்காடி

***6580—திரு. வீ. அலெக்சாண்டர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதியில் பண்ணைப் பசுமை நுகர்வோர் அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் பகுதியில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைமூலம் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடை தொடங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.